DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 40/2021

Miscellaneous :

Sessions : PW 5

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | ஆனந்தபாபு |
| Father / Husband Name | பெருமாள் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 19.**06.2025**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது சின்னகயப்பாக்கத்தில் வசித்து சென்ரிங் வேலை செய்து வருகிறேன். சாட்சி செல்வராஜ் என்பவரை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். **(பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது) கடந்த 1**3.06.2019 ம் தேதி காலை 6.30 மணிக்கு நான் அச்சிறுபாக்கம் சென்றபோது அச்சிறுபாக்கம் லூப் ரோடு அருகே போலிசார் விபத்து சம்மந்தமாக விசாரித்துக்கொண்டு வரைபடம் வரைந்தார்கள். அதில் நானும் செல்வராஜூம் சாட்சி கையொப்பம் செய்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. இறந்து போன முத்தாளை எனக்கு தெரியாது. விபத்து நடந்த இடம் எனக்கு பரிட்சயமான இடம் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன விவரம் எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. போலிசார் போட்ட பொய் வழக்கில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 40/2021

Miscellaneous :

Sessions : PW 4

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | நாகராஜ் |
| Father / Husband Name | மல்லிகன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 19**.06.2025**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது கொடுங்காலூரில் வசித்து கொத்தனார் வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன முத்தால் என்பவரை தெரியும். கடந்த 13.06.2019 ம் தேதி விடியற்காலை அச்சிறுபாக்கம் தேசிய நெடுஞ்சாலையில் அருள் மற்றும் முத்தாள் ஆகியோர் தூங்கிக்கொண்டு இருந்தபோது கார் மோதி விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார்கள். நான் செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சென்று பார்த்தபோது முத்தால் என்பவருக்கு கை கால் முகம் ஆகிய இடங்களில் அடிப்பட்டிருந்தது. அருள் என்பவருக்கும் உடல் முழுவதும் அடிப்பட்டிருந்தது. முத்தாள் என்பவர் 1 மாதம் கழித்து சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். அவர் பிரேதத்தின் மீது போலிசார் நடத்திய பிரேத விசாரணையில் நான் சாட்சியாக இருந்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

**2.** விபத்து குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இறந்துபோன முத்தாளின் அண்ணன் எனது நண்பர். போலிசார் என்னை காவல் நிலையத்திலும் பிறகு மதுராந்தகம் அரசு மருத்துவமனையிலும் விசாரித்தார்கள். இறந்துபோன நபர் எனது நணபரின் உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.